DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
CC.NO.169/2024

Deposition of LW1 examined as PW1 Date: 22.08.25

| | |
|---|---|
| Name | முகமது ஹாசிக் |
| Father's/Husband's Name | சபிக்குதின் |
| Village | வானாதிராஜபுரம் |
| Taluk | |
| Age | 39/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 22.08.25

(A1 வ present.)

முதல் விசாரணை

நான் மயிலாடுதுறையில் துணிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் ஊரில் எனக்கு பூர்வீகமாக எங்க அப்பாவின் சொத்து உள்ளது. அந்த சொத்து விவசாய நிலமாக உள்ளது. சர்வே எண்.91/2ஏ –ல் 217 1/2 குழியை இரண்டு பாகமாக பிரித்து 108.75 எனது பெரியப்பா ஆஜர் 1ம் எதிரியான அப்துல் முத்தலிப், மீதமுள்ள 108.75 பாகத்தை எனது அப்பா சபிக்குதினுக்கும் குடும்ப உறுப்பினர்களான அப்துல் முத்தலிப், சபிக்குதின், ஜியாவுதின், சாதிக் பாட்சா இவர்கள் அனைவரும் சேர்ந்து பேசி பாகபிரிவினை செய்துதான் மேற்கண்டவாறு பிரிக்கப்பட்டது. இது இல்லாத இதர சொத்துக்களை எனது அத்தை சிராஜ் நிஷா, அப்துல் முத்தலிப், ஜல்மா பீவி, 2ம் எதிரி ஜியாவுதின், சாதிக் பாட்சா ஆகியோர்கள் 1ம் எதிரி அப்துல் முத்தலிப்பின் தூண்டுதலின் பெயரில் மோசடி செய்து எனது அப்பாவை விட்டுவிட்டு விற்றுவிட்டார்கள். நான் மேற்படி மோசடி தொடர்பான புகாரினை 03.01.2022ம் தேதி புகாரினை குத்தாலம் காவல் நிலையத்தில் கொடுத்திருந்தேன். இரு தரப்பினரையும் கூப்பிட்டு போலீசார் விசாரணை செய்தனர். அப்போது உங்களுக்குரிய பாகத்தை கம்பிவேலி வைத்து அடைத்துக்கொள்ள முழு சம்மதத்தினையும் 1ம் எதிரி அப்துல் முத்தலிப் கொடுத்தார். அதன் படி நாங்கள் 22.01.2022ம் தேதி நாங்கள் எங்களுக்குரிய பாகத்தில் கம்பி வேலியை அடைத்துக்கொண்டிருந்தோம். அப்போது காலை 10.00 மணியளவில் ஆஜர் எதிரிகளான அப்துல் முத்தலிப், ஜியாவுதின், அப்துல் முத்தலிப்பின் மகன் முகாசின் வந்து அதில் அப்துல் முத்தலிப் என்னை நெஞ்சில் குத்தினார். ஆஜர் எதிரிகளான ஜியாவுதின், அப்துல் முத்தலிப்பும் என்னை குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி உனக்கு என்ன வயலில் வேலை என்று கூறி வயலில் போடப்பட்டிருந்த கம்பி வேலியை நம்பர் பிளேட் இல்லாத டிராக்டரை கொண்டு முகாசின் உடைத்தார். முகாசின் டிராக்டரை ஓட்டி என்மீதுமோத வந்ததில் எனக்கு தலையில் அடிபட்டு நான் கீழே விழுந்து விட்டேன். என்மீது வண்டியை விட்டு கொலை செய்து விடுவாரோ என்ற பயத்தில் நான் ஓடி வந்து விட்டேன். அதன் பிறகு நான் எனது நண்பர் செந்தில் குமார் என்பவரின் இருசக்கர வாகனத்தின் மூலமாக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன். அங்கு எனக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கிருந்து நான் காவல்நிலையம் சென்று மேற்படி பிரச்சனை தொடர்பான புகார் மனுவினை கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.**

S. Anil

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்காக எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் காலை சுமார் 11 மணி அளவில் சென்றேன். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று முடிந்த பின்பு குத்தாலம் காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்று புகார் கொடுத்தேன் என்றால் அன்றைய தினமே மாலை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன் நேரம் ஞாபகம் இல்லை. புகாரை யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் எனது நண்பர் ஹாஜா சுஜாவுதீன் எழுதிக் கொடுத்தார். நான் கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் மனு ரசீது ஏதேனும் போட்டுக் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். மனு ரசீதில் புகார் கொடுத்த தேதி மாதம் வருடம் குறிப்பிடப்பட்டு இருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டிருந்தது . புகாரில் எழுதி இருந்த விபரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் கொடுத்த புகாரில் எதிரிகள் என்னை குச்சிக்காரி தேவுடியா மகனே என்று என்னை திட்டியதாக குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். நான் கீழே விழுந்து எனக்கு தலையில்அடிபட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்று புகாரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினமே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் 22.01.2022 ம் தேதி தான் நான் புகார் கொடுத்தேன். நான் 26.01. 2022 ஆம் தேதி தான் புகார் கொடுத்தேன் என்று முதல் தகவல் அறிக்கையில் உதவி ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல நான் 22.01.2022-ம் தேதி தான் புகார் கொடுத்தேன். எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் ஆறு நபர்கள் அதில் இரண்டு பேர் பெண் வாரிசுகள் ஆவார்கள். பாகப்பிரிவினை சம்பந்தமாக ஏதேனும் ஆவணம் எழுதப்பட்டதா என்றால் 1997 ஆம் ஆண்டு குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள். முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஓஎஸ் 122 /2024 என்ற பாகப்பிரிவினை வழக்கினை நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது தகப்பனாருடன் கூட பிறந்தவர்களை எதிர்வாதிகளாக சேர்த்து உள்ளேன் என்றால் சரிதான். போலிசாரிடம் விசாரணையின் போது வீடியோ எடுத்ததை காட்டினேன் அதை பார்த்துவிட்டு என்னிடம் கொடுத்தார்கள். அந்த வீடியோவை எனது உடன் பிறந்த சகோதரர் ஷேக்முகமது எடுத்தார். மேற்படி விபரத்தை எனது புகாரிலும் போலிசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.செந்தில்குமார் எனது நண்பர் என்றால் சரிதான். அவருக்கு நான் எத்தனை மணிக்கு போன் செய்து அவர் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் நான் அவருக்கு போன் செய்யவில்லை நான் அவரிடம் பைனான்ஸுக்கு பணம் வாங்கி இருந்தேன் அதனை வாங்குவதற்காக எனது வீட்டிற்கு வந்திருந்தார் அப்போது எனது அம்மா நான் வயலில் இருப்பதாக கூறியதை கேட்டு அவர் வயலுக்கு வந்தார். மேற்படி விபரத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 91/ 2 A என்பது யாருடைய பெயரில் உள்ளது என்றால் ஆயிஷா பீவி என்பவர் பெயரில் உள்ளது.பிரச்சனைக்கு முன்பு முத்தலிப் என்பவர் தான் நிலத்தை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். பாகப்பிரிவினைக்கு பின்பு அந்த நிலத்தை அவர் சாகுபடி செய்யவில்லை. கம்பி வேலி போடுவதற்கு எத்தனை பேரை அழைத்து சென்றேன் என்றால் ஐந்து நபர்கள் அவர்கள் யார் யார் என்றால் எனக்கு தெரியவில்லை .அவ்வாறு கம்பி வேலி போடுவதற்காக வந்த நபர்கள் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் அவர்களை போலீசார் விசாரணை செய்திருப்பார்கள் அவ்வாறு இல்லை என்பதால் தான் போலீசார் அவர்களை விசாரணை செய்ய வில்லை என்றால் சரியல்ல அவர்கள் கம்பிவேலி போட்டுவிட்டு சென்றுவிட்டனர். மேற்படி நிலத்தை முத்தலிப் என்பவர் தான் பராமரிப்பு செய்து வந்தார் என்றாலும் நான் தான் மேற்படி நிலத்தில் அத்து மீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டேன் என்றாலும் எதிரிகள் என் மீது புகார் கொடுத்து விடுவார்கள் என்ற பயத்தில் நான் அவர்கள் மீது புகார் கொடுத்து விட்டேன் என்றாலும் சரியல்ல.எதிரிகள் என்னை எந்த தகாத வார்த்தைகளாலும் திட்டவில்லை என்றாலும் கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் மிகைப்படுத்தி தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல.